### நடப்பு நிதியாண்டில்

# ரூ.30,000 கோடி முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு திட்டம்!

## 60,000 பேருக்கு வேலைவாய்ப்பு!

சென்னை, ஜூலை 29-

மின்னணு பாகங்கள் உற்பத்திக்கான முக்கிய மையமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. இதன் காரணமாக ஆப்பிள் நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வருவது அதிகரித்துள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் 30ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்ப்பதுடன், சுமார் 60ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஆப்பிள் நிறுவனத்திற்காக உதிரி பாகங்களை தயாரிக்கும் பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இதனை மேலும் அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு மின்னணு பாகங்கள் உற்பத்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் மின்னணு பாகங்கள் உற்பத்தித் திட்டத்திற்கு இணையான சலுகைகளை வழங்கி, அதிகமான நிறுவனங்களை ஈர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும், இதன் மூலம் 30ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்ப்பதுடன், சுமார் 60ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 2023ம் ஆண்டு பொறுப்பேற்ற போது, ஆப்பிள் நிறுவனத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை தமிழ்நாட்டுக்கு கொண்டு வருவதற்கான பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்டதாகவும், இதற்கான பயன்கள் நமது மாநிலம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தற்போது, பிராண்ட் தமிழ்நாடு உலகளவில் பிரபல மடைந்துள்ளதால், மேலும் அதிகமான ஆப்பிள் சப்ளையர்கள் தமிழ்நாட்டை அணுகத் தொடங்கி உள்ளதாகவும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆப்பிள் நிறுவனத்தின் உலகளாவிய முக்கிய கூட்டாளிகளுள் ஒன்றான ஃபாக்ஸ்கான், தமிழ்நாட்டில் ஐபோன்களை ஏற்கனவே உற்பத்தி செய்கிறது.

இந்த உற்பத்தி சர்வதேச சந்தைகளுக்கும், குறிப்பாக அமெரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது தவிர, பெகாட்ரான், டாடா எலக்ட்ரானிக்ஸ் போன்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் ஆலைகளை அமைத்துள்ளன. தற்போது ஜாபில் உள்ளிட்ட நிறுவனங்கள் திருச்சியில் புதிய ஆலைகளை அமைத்து வருகின்றன. சால் காம்ப், கார்னிங், லிங்கி ஐடெக் மற்றும் ON செமிகண்டக்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், காஞ்சிபுரம், ஓசூர் பகுதிகளில் இயங்கி வருகின்றன. தற்போது, திருச்சியில் அமைக்கப்படும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மற்றும் மாநில அரசின் சலுகைகளால் தமிழ்நாட்டின் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது.

மின்னணுவியல் துறையில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளதாகவும், இந்தியாவின் மின்னணு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 41 சதவீதமாக உள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு அதிகபட்ச 14.65 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணு பாகங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் மின்னணு ஏற்றுமதியில் 50 பில்லியன் டாலர் இலக்கை எட்டவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

---

### தருமபுரி மாவட்டம் - கழகத் தீர்மானக் குழுச் செயலாளர்

# கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 29 -

கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தர்மபுரி மாவட்டம், அரூர் அருகே உள்ள கீரைப்பட்டியைச் சேர்ந்த கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் (வயது 75) நேற்று (28.07.2025 ) அதிகாலை உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்தினேன்.

பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே கழகத்தில் பணியாற்றிய அவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்று ஒருங்கிணைந்த தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட துணைச் செயலாளராக 50 ஆண்டுகளாக திறம்பட பணியாற்றியவர். 1989 தேர்தல் பரப்புரையில் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களின் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர்.

கழகத்தில் மாநில சட்டதிட்டக் குழு இணைச் செயலாளர் - மாநில கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் - 1977 முதல் தலைமைக் கழகப் பேச்சாளர் - தற்போது மாநில தீர்மானக் குழுச் செயலாளர் எனப் பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டு சிறையேகிய கீரை எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும் கழக உடன் பிறப்புகளுக்கும் எனது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

### கழக தீர்மானக் குழுச் செயலாளர்

# கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் உடல் நலக் குறைவால் மறைவு!

## தருமபுரி மாவட்டக் கழகத்தினர் அஞ்சலி!



தர்மபுரி, ஜுலை. 29-

தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள கீரப்பட்டியைச் சேர்ந்தவர் கீரை எம்.எஸ். விஸ்வநாதன் வயது (75) நேற்று உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கீரை எம்.எஸ். விஸ்வநாதன், பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே தி.மு.க.வில் பணியாற்றி வந்துள்ளார். முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருக்கமாக இருந்தார். 89-90 காலகட்டத்தில் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து தனது தம்பியின் திருமணத்தை நடத்தினார். ஒருங்கிணைந்த தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்ட துணைச் செயலாளராக 50 ஆண்டுகளாக திறம்பட பணியாற்றினார். 1989ல் தேர்தல் பிரச்சாரத்தில் முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கின் பேச்சை தமிழில் மொழி பெயர்த்து சொற்பொழிவாற்றினார்.

கட்சியில் மாநில சட்ட திட்ட குழு இணைச் செயலாளர், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளராகவும், 1977 முதல் தலைமைக் கழகப் பேச்சாளராகவும், தற்போது மாநில தீர்மானக் குழுச் செயலாளர் ஆக பணியாற்றி வந்தார்.

தி.மு.க. தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கடந்த சில தினங்களாக உடல் நலிவுற்று இருந்த நிலையில் 28.07.2025 அதிகாலை 2.00 மணியளவில் அரூர் கீரைப்பட்டியில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். இவருக்கு பிரேமா என்ற மனைவியும் நற்றமிழ், நிலவு, தென்றல் ஆகிய மூன்று மகன்களும் அன்புச்செழியன் என்ற மகனும் உள்ளனர்.

தகவல் அறிந்து மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

---

### அத்தனை கோடி, இத்தனை கோடி நிதியென பிரதமர் பட்டியலிடாமல்

# தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை நிறைவேற்றினால்தான் மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியும் !

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜுலை. 29-

அத்தனை கோடி, இத்தனை கோடி நிதியென பிரதமர் பட்டியலிடாமல், தமிழ்நாடு அரசு வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றினால்தான் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற முடியும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து 28.7.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டிற்கு வந்த பிரதமர் மோடி அவர்கள் வழக்கம்போல் இம்முறையும் தமிழகத்திற்கு நாங்கள் நிதியை அள்ளி அள்ளி தருகிறோம் என்கிற கோணத்தில் பேசிவிட்டு சென்றுள்ளார். ஆனால் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். வெள்ள நிவாரண நிதி தொடங்கி கல்வி நிதி வரை பலமுறை கேட்டு கேட்டு தமிழகம் சலிப்படைய தொடங்கிவிட்டது என்பதே உண்மை.

இந்நிலையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடந்த விழாவில் பிரதமர் மோடி அவர்களிடம் தமிழகத்தின் கோரிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த மனு, அமைச்சர் தங்கம் தென்னரசு மூலம் வழங்கப்பட்டுள்ளது. இம்மனுவில் தமிழகத்தின் தேவைகள், எதிர்பார்ப்புகள் அனைத்துமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கான ரூ.2 ஆயிரத்து 152 கோடி கல்வி நிதியை தேசிய கல்வி கொள்கையில் கையெழுத்திடவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஒன்றிய அரசு இன்னமும் வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. ஒன்றிய அரசின் மும்மொழி கொள்கையை தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்களும் கூட ஏற்க தயாராக இல்லை.

தமிழகத்திற்கான கல்வி நிதி வழங்கப்படாத காரணத்தால் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகளின் எதிர்கால படிப்பு பாதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கல்வி அமைப்பில் காணப்படும் 2.20 லட்சம் ஆசிரியர்கள், 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களும் இதனால் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். பிஎம்ஸ்ரீ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் மட்டுமே கல்வி நிதியை ஒதுக்குவோம் என ஒன்றிய அரசு உத்தரவிடுவது ஜனநாயக கொள்கைகளுக்கு விரோதமானதாகும்.


தினகரன்
தீர்வு கிடைக்குமா?

தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பு அனுமதிக்கப்பட்ட ரயில்பாதை திட்டங்கள் கூட இன்னமும் செயல்படுத்தப்படாமல் உள்ளது. திண்டிவனம் - செஞ்சி, மதுரை - தூத்துக்குடி உள்ளிட்ட முக்கிய ரயில்பாதை திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்துவது நல்லது. கோவை, மதுரை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் திட்ட பணிகளும் செயல்பாட்டுக்கு வருவதில் தாமதம் நீடிக்கிறது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து நடந்து வருகிறது. தமிழக மீனவர்களின் படகுகளையும் அடிக்கடி சிறைபிடித்து கொள்கின்றனர். மீனவர்களையும், மீன்பிடி உபகரணங்களை மீட்க ஒன்றிய அரசு இன்று வரை நடவடிக்கை எடுத்த மாதிரி தெரியவில்லை. பிரதமர் மோடி அவர்கள் தனது நேரடி கவனத்தை செலுத்தினால், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விரைவில் மீட்க முடியும்.

ஒன்றிய அரசின் 2018-19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசத்தில் 2 பாதுகாப்பு தொழில்துறை பெருவழிச்சாலைகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளும் இல்லை. சேலம் உருக்காலையில் உள்ள பயன்படுத்தப்படாத நிலத்தை கொண்டு பாதுகாப்பு தொழில் பெருவழிச்சாலைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தமிழகத்தின் உணர்வுகளுக்கும், மக்களின் நலன்களுக்கும் பிரதமர் மதிப்பளிப்பதாக இருந்தால், தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஏற்று, பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கிட வேண்டும். பொத்தாம் பொதுவாக அத்தனை கோடி, இத்தனை கோடி நிதி என பிரதமர் இனிமேல் பட்டியலிடாமல், தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை இயன்றவரையெல்லாம் நிறைவேற்றி தந்துள்ளோம் என பேசினால், மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற முடியும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் அதிகரிப்பு!

## இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் தகவல்!

நெல்லை, ஜுலை 29-

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் 14.5 சதவீதம் அதிகரித்து, 43 ஆயிரத்து 70 கோடி ரூபாய் வசூலாகி உள்ளது.

முத்திரைத்தாள் வரி, பதிவு கட்டணம், மோட்டார் வாகன வரி, கலால் வரி மற்றும் பிற வரிகள் மூலம் திரட்டப்படும் பணம், மாநில ஜிஎஸ்டி உள்ளிட்டவை மாநிலங்களின் சொந்த வரி வருவாயாக கணக்கிடப்படுகிறது.

இந்நிலையில், தமிழ்நாட்டின் வரி வருவாய் குறித்த இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் தற்காலிக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் 43 ஆயிரத்து 70 கோடியே 45 லட்சம் ரூபாய் வசூலாகி உள்ளதாகவும், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் வசூலிக்கப்பட்டதைவிட இது 14.5 சதவீதம் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மாநில சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 21 சதவீதம் அதிகரித்து 15 ஆயிரத்து 761 கோடியே 4 லட்சம் ரூபாயாக உள்ளது. கடந்த ஏப்ரல்ஜுன் காலகட்டத்தில் இதர வரிகள் 23.9 சதவீதம் அதிகரித்து 3ஆயிரத்து 529 கோடியே 86 லட்சம் ரூபாய் வசூலாகி உள்ளது. முத்திரைத்தாள்கள் மற்றும் பதிவு கட்டணங்கள் மூலம் வருவாய் 19.3 சதவீதம் அதிகரித்து 5 ஆயிரத்து 868 கோடியே 88 லட்சம் ரூபாயாக உள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பெட்ரோல் டீசல் மற்றும் மதுபானங்கள் மீதான வரி 7.8 சதவீதம் அதிகரித்து 14ஆயிரத்து 954 கோடியே 37 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 75.3 சதவீதமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில், விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 91 புத்துகளுக்கான 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய கழகச் செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள், பேரூர் செயலாளர், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### கழக அயலக அணியின் துரித நடவடிக்கையால்

# சவுதி அரேபியாவில் இருந்து தமிழர் மீட்கப்பட்டு - தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்!

## மயிலாடுதுறை வெங்கடேசன் - அயலக அணி நிர்வாகிகள் நடவடிக்கை!

தமாம், ஜுலை 29-

கடந்த 25 ஆண்டுகளாக சவுதி அரேபியா நஜ்ரான் பகுதிக்கு வேலைக்கு வந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த சின்னசாமி ஆறுமுகம் கடந்த 3 மாதத்திற்கு முன் தம்மாம் விமான நிலையம் வழியாகத் தாயகம் திரும்பும் போது உடல் நலக்குறைவால மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனையடுத்து தமிழ்நாட்டில் உள்ள குடும்பத்து டன் எவ்வித தொடர்பும் இல்லாததால் அச்சமடைந்த குடும்பத்தினர் கண்ணீர் மல்க ஆறுமுகத்தை மீட்டுத் தரும்படி முதல்வருக்கும் தமிழ்நாடு அரசின் உதவியையும் நாடினர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் சவுதி அரேபியா கிழக்கு மண்டல தமிழ்நாடு நலச்சங்கத்தின் தலைவரும் அயலகத் தி.மு.க.வின் நிர்வாகி, தேசிய மனித உரிமைகள் கழகத்தின் சவுதி அரேபியாவின் துணைத் தலைவருமான மயிலாடுதுறை வெங்கடேசன் மற்றும் தேசிய மனித உரிமைகள் கழகத்தின் சவுதி அரேபியா தலைவர் சமூக ஆர்வலர் நாஸ் வக்கம் ஆகியோர் நீண்ட முயற்சிக்குப் பின் ஆறுமுகத்தை கண்டறிந்து அவரின் குடும்பத்திற்கு தகவல் கொடுத்தனர்.

மேலும் அவருக்கு போதிய மருத்துவ சிகிச்சை வழங்கி ஆறுமுகத்திற்கு நீண்ட முயற்சிக்குப் பின் நாடு திரும்ப எக்சிட் பேப்பர் பெற்று தமிழ்நாடு நலச் சங்கத்தின் மூலம் விமான பயணச்சீட்டு வழங்கப்பட்டு 26.7.2025 அன்று ஏர் தாயகம் அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சமூகப் பணியில் பணியில் திருச்சி ஆரிஃப் மஃபூல், முகவை சீனி முஹம்மது, நவரத்தினம், ஹனிபா, துறையூர் கமால் பாட்சா, திருச்சி யூனுஸ்கான், காயல் முகமது நூஹ், கோவை ஹாக்கிம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் ஒன்றியம், காக்கணாம்பாளையம் ஊராட்சி சிங்கம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடமும், கந்திலி ஒன்றியம் சின்னாரம்பட்டி ஊராட்சி நாய்க்கனூர் நிழற்கூடம் முதல் கலைஞர் சிலை வரை முதலமைச்சரின் கிராமச் சாலைகள் விரிவாக்க திட்டத்தின் வாயிலாக 15 இலட்சம் ஆக மொத்தம் 51 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பணிகளை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் விஜயா அருணாசலம், கே.எ.குணசேகரன், டி.ஆர்.ஞானசேகரன், சி.சின்னதம்பி, சண்முகம், கலைவாணி செல்வராஜ், தாமோதிரன், பி.ஆர்.சின்னபையன், பூபதி, இளையராஜா மற்றும் பலர் பங்கேற்றனர்.